பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் / அதிகாரிகள் சங்கங்களின்

# கூட்டு போராட்டக்குழு (Joint Action Committee )

## சென்னை தொலைபேசி

# ஏப்ரல் - 20 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம்

**தோழர்களே !**

**சென்னை தொலைபேசியில் செயல்படும் 15க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் மாநிலச் செயலர்களின் கூட்டம் 24-03-2010ல் அண்ணாசாலை இணைப்பகத்தில் நடைபெற்றது. அதில் அகில இந்திய தலைமையின் அறைகூவலை ஏற்று 26-03-2010 அன்று தர்ணா நடத்தவும், 20-04-2010 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை நடத்தவும் சென்னை தொலைபேசிக்கான கூட்டுப்போராட்டக்குழு அமைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் மார்ச் 26 தர்ணாவை புரசைவாக்கத்தில் அமைந்துள்ள தலைமைப் பொதுமேலாளர் அலுவலக வளாகத்தில் நடத்துவது என்றும், ஏப்ரல் 20 துவங்கும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளை ஊழியரிடம் விளக்க பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.**

## கோரிக்கைகள் :

1. **I.T.S. அதிகாரிகளை பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் விரைவாக இணைப்பது**
2. **பங்கு விற்பனை கூடாது / பி.எஸ்.என்.எல் -ல் தனியார்மயம் கூடாது.**
3. **ஆட்குறைப்பு கூடாது / விருப்ப ஓய்வுத் திட்டம் தேவையில்லை.**
4. **பி.எஸ்.என்.எல். கேபிள்கள் மற்றும் கட்டுமானங்களை தனியார் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது.**
5. **நிறுவனப்பணிகளை ஒப்பந்த அடிப்படையில் வெளியாரிடம் ஒப்படைக்கக்கூடாது.**
6. **மொபைல் சேவையின் விரிவாக்கத்தை தாதமம் செய்யக்கூடாது.**
7. **பி.எஸ்.என்.எல். ஓய்வூதியருக்கு I.D.A. பென்ஷனை உயர்த்தவேண்டும்.**

பி.எஸ்.என்.எல். நிறுவனம் அக்டோபர் 2000-ல் அமைக்கப்பட்டது. 2000 முதல் 2007 வரை நிறுவனம் லாபகரமாக இயங்கி வந்தது. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக பி.எஸ்.என்.எல். நிறுவனம் வருமானத்தை இழந்து வருவதாக நிர்வாகம் அறிக்கை கொடுத்துள்ளது. இந்நிலையில் பி.எஸ்.என்.எல்.-ன் வளர்ச்சி திட்டங்களும் முடக்கப்படுகின்றன. 9.3 கோடி மொபைல் இணைப்புக்களை கொடுப்பதற்கான உபகரணங்களை வாங்குவதற்கு Nokia - ன் நிறுவனம் போட்ட வழக்கு உள்ளிட்ட தடைகள் நீங்கிய பிறகும் காலம் தாழ்த்தப்படுவதில் நியாயமில்லை என்று அகில இந்திய தலைவர்கள் பிரதமருக்கு கடிதம் கொடுத்தனர்.

வருமான இழப்பிலிருந்து பி.எஸ்.என்.எல்.-ஐ பாதுகாப்பதற்காக ஆலோசனை வழங்குவதற்காக பிரதமரின் தொலைத் தொடர்பு ஆலோசகரான சாம் பெட்ரோடாவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பி.எஸ்.என்.எல்.-ன் 30% பங்குகளை விற்கலாம் என்றும், 1 லட்சம் ஊழியர்களை விருப்ப ஓய்வு மூலம் வெளியேற்றலாம் என்றும் ; தனியார் மயத்திற்கு ஆதரவான பல ஆலோசனையை வழங்கி உள்ளது.

நாடு முழுவதுமான கட்டமைப்புகளை கொண்டு ஆண்டுக்கு ரூ.35,000 வருமானம் ஈட்டுகின்ற 3 லட்சம் தொழிலாளர்கள் / அதிகாரிகள் பணியாற்றுகின்ற மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனம் பி.எஸ்.என்.எல். கடந்த முறை மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கிய பல இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள் போட்ட தடையால் பி.எஸ்.என்.எல். உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன. ஆனால் இப்போது கடிவாளம் இல்லாத குதிரையாக ஓடிக் கொண்டிருக்கிறது மத்திய அரசு.

மத்திய அரசு திட்டமிட்டு பொதுத்துறை நிறுவனங்களை பங்கு விற்பனை கொள்கை மூலமாக சீரழிக்க முயல்கிறது. இந்தியாவின் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இக்கொள்கையை முறியடிக்க பல கட்டப்போராட்டங்களை நடத்தியுள்ளன. சமீபத்தில் கூட மார்ச்-5ல் ஒன்பது மத்திய தொழிற்சங்கங்கள் மன்மோகன் சிங் அரசின் பொதுத்துறைக்கு எதிரான கொள்கைகளை கண்டித்து நாடெங்கும் போராட்டத்தை நடத்தினர். ஆனால் மத்திய அரசு தொழிற்சங்கங்களின் கோரிக்கையை செவிமடுக்காமல் தனது கொள்கைகளை கவனமுடன் நடைமுறைப் படுத்தி வருகிறது. எனவே ஏப்ரல் 20 முதல் நாம் துவங்க உள்ள **காலவரையற்ற வேலை நிறுத்தம்** மிக மிக முக்கியம் வாய்ந்தது. நமது நிறுவனத்தை காத்திடவும், நிறுவனத்தில் பணியாற்றும் 3 லட்சம் பேரின் எதிர்காலத்தை பாதுகாத்திடவும் ஏப்ரல் 20-ல் துவங்கும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை முழு வெற்றியாக்க வேண்டியது நமது அனைவரின் கடமையாகும். தனியார் துறை நிறுவனங்கள் எல்லாம் சகட்டு மேனிக்கு விரிவாக்கம் செய்து கொள்ளும் சூழலில் கடந்த பல ஆண்டுகளாக பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் விரிவாக்கத்தை முடக்கி வைத்ததின் மூலமாக நாம் பின்தள்ளப்பட்டுள்ளோம். நமது லாபம் சரிந்துள்ளது. உதாரணத்திற்கு முன்பு சென்னை தொலைபேசியில் ரூ.574 கோடிக்கு மேல் லாபம் ஈட்டிய நாம் தற்போது வெறும் 10 கோடி ரூபாய் லாபம் ஈட்டுவதற்கே படாதபாடு படுகிறோம். நமது நிறுவனம் இரண்டாவது இடத்திலிருந்து நான்காவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது. இந்த சூழலில்தான் திரு. சாம்பிட்ரோடா தலைமையிலான குழு ஊழியர் விரோத பரிந்துரைகளை பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளது. தொழிற்சங்கங்களிடம் கலந்தாலோசிக்காமல் பிட்ரோடா குழுவின் பரிந்துரைகள் ஒவ்வொன்றாக அமுல்படுத்தப்படுகின்றன. ஏற்கனவே இக்குழுவின் பரிந்துரையை ஏற்று 93 மில்லியன் மொபைல் இணைப்புக்கான டெண்டர் ரத்து செய்யப்பட்டுவிட்டது. இத்தகைய போக்கினை முறியடிக்க ஒன்றுபட்டு போராடுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. எனவே தான் புதுடில்லியில் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி கூட்டுப்போராட்டக்குழுவை 22-03-2010ல் அமைத்தார்கள். அதன் தலைவராக தோழர் N.T.சஜ்வாணியும், அமைப்பாளராக தோழர் V.A.N.நம்பூதிரியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மறுநாளே காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கான நோட்டீஸ் நிர்வாகத்திடம் தரப்பட்டுவிட்டது. ஒன்றுபட்ட போராட்டத்தின் முன் நிர்வாகமும் அரசும் பணிந்துதான் தீரவேண்டும். எனவே, ஏப்ரல்- 20 துவங்கும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க அதன் கோரிக்கைகளை நமது ஊழியரிடம் தீவிரமாக பிரச்சாரம் செய்ய உங்கள் அனைவரையும் கூட்டுப்போராட்டக் குழுவின் சார்பில் வேண்டிக் கொள்கிறோம்.

**போராட்ட வாழ்த்துக்களுடன்...**


**(சி.கே.மதிவாணன்)**
தலைவர்,
செல் : 9487 621 621

**(எஸ். தங்கராஜ்)**
அமைப்பாளர்,
செல் : 9444 299 596


**Joint Action Committee**
**Chennai Telephones**